Tamil

# கோவிட்-19 அவசர நிவாரண உதவி







அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கமானது (Australian Red Cross), கோவிட்-19 சர்வதேச நோய்த்தொற்றுப் பரவலால் பாதிக்கப்பட்ட, அவுஸ்திரேலியாவில் தற்காலிக விசாவில் தங்கியிருப்பவர்களுக்கு அவசர நிவாரண உதவியை வழங்கிவருகிறது.

**அவுஸ்திரேலிய அரசாங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் போன்றவற்றின் நிதி ஆதரவுடன், உணவுப்பொதிகள், விவகார உதவி, மற்றும் ஒரு தடவை வழங்கப்படும் பண உதவி போன்றவற்றிற்கு எங்களால் உதவ முடியும்.**

## பின்வரும் நிபந்தனைகளை நீங்கள் பூர்த்தி செய்தால், இதற்கு நீங்கள் தகுதிபெறலாம்:

- நீங்கள் ஒரு அவுஸ்திரேலிய குடிமகன் அல்லது நிரந்தர வதிவாளர் அல்ல
- உணவு அல்லது மருத்துவச் செலவு போன்ற உடனடித் தேவை உங்களுக்கு உள்ளது
- உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய உங்களுக்கு வருமானமோ அல்லது சேமிப்போ இல்லை

## நான் எவ்வாறு விண்ணப்பிப்பது?

பின்வரும் எமது இணையதளம் ஊடாகவே நீங்கள் கட்டாயம் விண்ணப்பிக்க வேண்டும்:

redcross.org.au/emergencyrelief

உங்கள் விண்ணப்பத்திற்கு முன்னர், பின்வரும் ஆவணங்களை நீங்கள் தயார் செய்ய வேண்டும்:

- உங்கள் விசா நிலைமைக்கான சான்று உதாரணம்: கடவுச்சீட்டு எண்
- உங்கள் வங்கிக் கணக்கின் பெயர், வங்கிக் கிளை எண் (பி.எஸ்.பி) மற்றும் வங்கிக் கணக்கு எண் போன்றவற்றைக் காட்டும் ஒரு வங்கி ஆவணம்.

உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாவிட்டாலும், அல்லது தற்போது செல்லுபடியாகும் விசா இல்லை என்றாலும்கூட, நீங்கள் விண்ணப்பிக்கலாம். உங்கள் விண்ணப்பத்தைப் பற்றிக் கலந்துரையாட நாங்கள் உங்களைத் தொடர்புகொள்வோம்.

## ஏன் எனது தனிப்பட்ட தகவல்களை நீங்கள் வேண்டுகிறீர்கள்?

உங்கள் நிகழ்நிலை (ஆன்லைன்) விண்ணப்பத்தில் நீங்கள் வழங்கும் தகவல்கள், செஞ்சிலுவைச் சங்கத்தின் தளம் ஒன்றிற்கு அனுப்பப்படுகின்றன. இது ஒரு அரசாங்க தரவுத்தளமோ அல்லது அமைப்போ அல்ல, அத்துடன் இது உங்கள் தற்போதைய அல்லது எதிர்கால விசாக்களை பாதிக்காது.

## விண்ணப்பிக்க எனக்கு உதவி தேவைப்பட்டால் என்ன செய்வது?

உங்களால் சொந்தமாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய முடியாவிட்டால், நீங்கள் ஒரு குடும்ப உறுப்பினர், நண்பர் அல்லது வேறு அமைப்பின் உதவியை நாடலாம். உங்கள் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, ஒரு செஞ்சிலுவைச் சங்க குழு உறுப்பினர் உங்கள் விண்ணப்பத்தை மதிப்பாய்வு செய்வார், அத்துடன் தொலைபேசி மூலம் உங்களைத் தொடர்பு கொள்ளக்கூடும். ஒரு படிமுறை வழிகாட்டியானது செஞ்சிலுவைச் சங்க வலைத்தளத்திலும் கிடைக்கிறது.

## எனது கட்டணத்தை நான் பெற எவ்வளவு காலம் எடுக்கும்?

அதிக அளவில் விண்ணப்பங்களை நாங்கள் பெறுவதனால், உங்கள் விண்ணப்பத்திற்கு பதிலளிப்பதில் தாமதம் ஏற்படும். தயவுசெய்து உங்கள் கட்டணத் திகதி தொடர்பான கேள்விகளுடன் மின்னஞ்சல் அனுப்பவோ அல்லது அழைக்கவோ வேண்டாம். ஒரு பணியாளர் உங்களைத் தொடர்புகொள்ளும் வரை காத்திருக்கவும்.